1978 மார்ச் 16]

வட ஆற்காடு மாவட்டத்தில் நில நீர்.

*589—வினா திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டத்தில் நிலத்தடி நீரை பாதுகாக்க என்ன ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது ?

(ஆ) எந்தெந்த தாலூக்காக்களில் நிலத்தடி நீர் இல்லை என்று தெரிய வந்துள்ளது ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :

(அ) விரிவான, விஞ்ஞான அடிப்படையிலான நிலநீர் ஆய்வு வட ஆற்காடு மாவட்டத்தில் நிலநீர் இருப்பு குறித்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆய்வு முடியும் வரையில் ஒன்றியம் வாரியாக தற்பொழுது உள்ள நிலநீர் இருப்பு, நிலநீர் இறைவை மற்றும் மீதிமுள்ள நிலநீர் கணக்கிடப்படுகிறது. கணக்கிடப்படும் மீதமுள்ள நிலநீரிலிருந்து தொடர்ந்து கூட்டுறவுத் துறையின் சிறுபாசனத் திட்டங்கள் செயல்படுத்த அனுமதி அளிக்கப்படுகிறது. இரு கிணறுகளுக்கு இடைப்பட்ட தூரமும் வரையறுக்கப்படுகிறது.

(ஆ) நிலநீர் எல்லா வட்டங்களிலும் உள்ளது. ஆனல் கீழ்க்கண்ட தாலூக்காக்களில் செலவழிக்கப்படும் நீர், நீர் வரத்தை விடஅதிகமாக உள்ளது :—

1. அரக்கோணம்.

2. குடியாத்தம்.

3. வேலூர்.

4. வாலாஜாப்பேட்டை.

5. ஆரணி.

6. வந்தவாசி.

[1978 மார்ச் 16

திரு. இ. தமிழரசன் ; பேரவைத் தலைவரவர்களே, இந்த வட ஆற்காடு மாவட்டத்தைச் சுற்றிலும் மலைகள் நிறைந்த இடம். இது விளைச்சலிலும் இரண்டாவது இடத்தைத் தமிழகத்திலே பெற்றிருக்கிறது. இருந்தாலும் அந்தக் காடுகளிலும் மலைகளிலும் இருந்து வரும் காட்டாற்றுநீரை ஆங்காங்கே தடுத்து நிறுத்தி வைப்பதற்கு நாங்கள் பலபேர் மனு கொடுத்திருந்தோம். அப்படியிருந்தும் இதுவரையிலும் சரியாகக் கவனிக்கப்படவில்லை. பத்திரப்பள்ளி, மோர்தனு, பல்லடம் போன்ற இடங்களில் தக்க நடவடிக்கை எடுப்பதாக உறுதி கொடுக்கப்பட்டிருந்தும், இதுவரையிலே சரியாத கவனிக்கப்படவில்லை. ஆகவே, இதைப்போன்ற ஏற்பாடுகளைச் செய்து நிலத்தடி நீரைப் பாதுகாப்பதற்கு இந்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, நிதி வாயில்களைப் பொறுத்து இது கவனிக்கப்படும்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவரவர்களே, நிலத்தடி நீர் குறித்து எந்தெந்த முறையில் ஆய்வு செய்யப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன். அடுத்து அணை கட்டி பாதுகாப்பதால் நிலத்தடி நீர் சான்றிதழ் கொடுக்க அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அதுபற்றி தனிக் கேள்வி போடவும்.

திரு. கே. பண்ணை சேதுராம் : தலைவரவர்களே, தமிழகத்தில் நிலத்தடி நீர் பாதுகாப்பில் கண்டிப்பான முறையை இந்த அரசு நிறைவேற்றி வருவதால் அந்தப் பகுதிகளிலே பயிர் செய்கின்ற சிறிய விவசாயிகளுக்கு மின் இணைப்புக் கிடைக்காமல் பாதிப்பு ஏற்பட்டுள்ளது அரசுக்குத் தெரியுமா ? கடந்த ஆண்டில் பெய்த மழையின் காரணமாக நிலத்தடி நீர் நன்றாக இருக்கிறது என்று நிபுணர்கள் தெரிவித்திருக்கின்றனர். ஆகவே, 1977–78 ஆம் ஆண்டு வரை வரப்பெற்ற மனுக்களுக்காவது மின் இணைப்பு கொடுக்க அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அதையெல்லாம் ஒட்டித்தான் இவ்வாண்டு 35 ஆயிரம் பம்ப் செட்டுகளுக்கு நிலத்தடி நீர் சான்றிதழ் இல்லாமல் மின் வசதி வழங்கலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

திரு. துரை முருகன் : தலைவரவர்களே, இந்தக் கேள்வி '(அ)' வுக்கு அவர்கள் அளித்த பதிலில் அரக்கோணம், குடியாத்தம் போன்ற தாலுக்காக்களில் நீர் செலவு அதிகமாக ஆகிறது என்று அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். அது சரியாக விளங்கவில்லை. அதை விளக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

1978 மார்ச் 16]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, பொதுவாக ஆண்டுதோறும் பெய்கின்ற மழையின் மூலம் நிலத் தடி நீர் அதிகமாகும். இதை நீர் வரத்து என்று சொல்வார்கள். கிணறு வெட்டி நீரேற்றுக்கள் மூலமாக அந்தத் தண்ணீரை வெளி யேற்றுகிறபோது அதை நீர் செலவு என்று சொல்வார்கள். ஆண்டுதோறும் கிடைக்கின்ற தண்ணீரின் வரத்தைவிட பம்பின் மூலமாக வெளியேற்றப்படுகிற தண்ணீர் அதிகமாக இருந்தால் அங்கே நிலத்தடி நீரின் மட்டம் குறைந்துவிடும். அப்படி அதி கத் தண்ணீரை வெளியேற்றிவிட்டால் பின்னர் நீர் வளமே இல்லாமல் போய்விடும். மழைக் காலங்களில் கிடைக்கின்ற, மற் றும் மலையிலிருந்து வருகின்ற நீரினால் நிலத்தடி நீர் மட்டம் அதிக மாகிறது. அந்தத் தண்ணீரை கிணறுகளிலிருந்து இரைப்பதன் மூலமாகவும், நீரேற்றுக்களின் மூலமாகவும், மழையினால் வரு கின்ற தண்ணீரின் அளவை விட அதிகமாக செலவிடப்படுகிறது என்ற குறிப்புத்தான் அது என்பதைத் தெரிவித்துக்கொள்கி றேன்.

(முற்பகல் 9—10.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது வட ஆற்காடு மாவட்டத்தைப்பற்றிய கேள்வி. வட ஆற்காடு மாவட்ட உறுப் பினர்கள் கேட்டால் நல்லது. அத்தனை பேர்களும் கேட்பது நியாயமல்ல.

திரு. எம். ஏ. ஜெயவேலு : பாலாற்றிலிருந்து தற்போது பத்து இருபது மைல்களுக்கு அப்பாலுள்ள கிராமங்களுக்கு தண் ணீர் எடுத்துச் செல்கிறார்கள் குடிநீருக்காக. ஆகவே பாலாற்றுப் படுகையில் தண்ணீர் குறைகிற அபாயம் இருக்கிறது. அந்த படுகையில் இருப்பவர்களுக்கு தண்ணீர் கிடைக்காத ஆபத்து இருக்கிறது. ஆகவே, நீண்ட தூரம் தண்ணீரை எடுத்துச் செல்லாமல் இருப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இது சம்பந்தமாக தனிக் கேள்வி போடவும்.

திரு. எஸ். ஜே. இராமசாமி : இன்று அரக்கோணம், வாலாஜா போன்ற வட்டங்களில் தண்ணீர் செலவு அதிகமாகி றது. ஆகவே, சர்ட்டிபிகேட் வழங்க முடியாது என்று சொல் கிறார்கள். தண்ணீர் உள்ள இடங்கள் வட ஆற்காடு மாவட்டத் தில் எவை எவை ? இப்போது பெய்த மழை காரணமாக நீர் மட்டம்கூட ஏறியிருக்கும். ஆகவே, விதிவிலக்கு கொடுத்து வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள அரக்கோணம், வாலாஜா போன்றவற்றை ஏற்றுக்கொள்ள முடியுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : வட ஆற்காடு மாவட்டத்தில் மொத்தம் 36 ஒன்றியங்கள் இருக்கின்றன. இவற் றில் 28 ஒன்றியங்களில் ஆய்வு வேலை முடிந்து விட்டது. மீதி

எட்டு ஒன்றியங்களில் ஆய்வு வேலே நடந்துவருகிறது. இந்த 28 ஒன்றியங்களில் 11 ஒன்றியங்களில் நிலத்தடி நீர் இல்லே. மேலும் நீர் எடுக்கும் வாய்ப்பு இல்லே என்ற விவரம் இங்கே இருக்கிறது. இந்த ஆண்டு மழை பெய்ததன்மூலம் எவ்வளவு நிலத்தடி நீர் அதிகமாக ஆகியிருக்கிறது என்பதை இந்தக் கோடை காலத்தில் கணக்கெடுப்பது மூலம்தான் அறிய முடியும்.

திரு. துரை முருகன்: அரக்கோணம், குடியாத்தம், வாலாஜா போன்ற தாலுக்காக்களில் நீர் செலவைவிட வரத்து குறைவாக இருக்கிறது என்று சொல்கிருர்கள். நிலத்தடி நீரை கிணறுகளின்மூலம் எடுத்துவிட்டால் வரத்து குறைவாகப் போய்விடும் என்று சொன்னுல், அதற்காக பயிர் செய்யாமல் இருக்கமுடியுமா எங்கள் தாலுகாவில்? அங்கு மழை அதிகமாகப் பெய்வது கிடையாது. காரணம், நான் அங்கே இல்லே. அதுமட்டுமல்ல பாலாற்றில் தண்ணீர் வருவதில்லே.

மாண்புமிகு பேரவைத் தலேவர்: அத்தனே பேர்களுக்கும் நிலேமை புரிகிறது. கேள்வியை விளக்காமல் சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. துரை முருகன்: பாலாற்றில் எங்களுக்கு சொட்டு தண்ணீர் கிடைப்பதில்லே. ஆனுல் சர்ட்டிபிகேட் வேண்டும் என்று கேட்கப்படுகிறது. காவிரியில் தண்ணீர் வரவில்லேயென்ருல் மைசூர் அரசோடு வாதாடுகிறது இந்த சர்க்கார். அதே சமயத்தில் பேத்தமங்கலம் ஏரியில் அணே கட்டியிருக்கிருர்கள். ஆகவே பாலாற்றுக்கும் தண்ணீர் வரவேண்டும் என்ற வகையில் காவிரி தண்ணீருக்காக வாதாடுவது போன்று பாலாற்றுக்கும் தண்ணீர் வர மைசூர் அரசோடு போராட இந்த அரசு தயாராயிருக்கிறதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: உறுப்பினர் அவர்கள் இருக்கிற இடத்தில் மழை பெய்யுமானுல் உண்மையிலேயே தமிழ் நாட்டுக்கு அது மிகப் பெரிய வரப்பிரசாதமாகும். எங்கெங்கே மழை வேண்டுமோ அங்கே அவர்களே அரசாங்கச் செலவில்கூட அனுப்பி வைக்கலாம். ஆனுல் நிலேமை அப்படியல்ல. பருவக் காற்றின் அடிப்படையில்தான் இந்த மழை பெய்ய வேண்டிய கட்டாயம் இருப்பதால் நீர்வளம் தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் ஒரு நிச்சயமற்ற தன்மையைப் பெற்றிருக்கிறது.

அவர்கள் கர்நாடகாவோடு ஏன் பாலாறு சம்பந்தமாகப் பேசக்கூடாது என்று கேட்டார்கள். காவிரிபற்றி பேசுவது போல் பாலாறுபற்றியும் பேசவேண்டும் என்று குறிப்பிட்டார்கள். நான் அவர்களுக்குச் சொல்ல விரும்புவது முடிந்த கதை தொடர்வதில்லே என்பதுதான்.

1978 மார்ச் 16]

திரு. அ.க. அரங்கநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்தைப் பொறுத்த வரையில், விவசாயத்திற்கு நிலத்தடி நீரை எல்லாம் பயன்படுத்திவிட்டதால் கிணறுகளில் வெகு ஆழத்தில் கூட தண்ணீர் கிடைப்பது இல்லை. அங்கு விவசாயத்திற்கு தண்ணீர் பற்றாக்குறை இருந்து கொண்டிருப்பதால்—இதை தவிர்க்க—ஆந்திராவிலிருந்து இப்போது சென்னை மாநகருக்கு தண்ணீர் கொண்டு வருவதற்கு திட்டமிருப்பதாக பேசப்படுகிறது. அப்படி ஆந்திராவிலிருந்து தண்ணீர் கொண்டு வரும்போது இந்தத் தண்ணீரை பாலாற்று வழியாக கொண்டு வந்தால், அங்கு நிலத்தடி தண்ணீர் ஏற்பட்டு கிணறுகளில் தண்ணீர் நிறைவதற்கு வாய்ப்பு ஏற்படும். ஆகவே அதற்கு ஏதாவது ஏற்பாடு செய்ய உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனை மிகவும் ஆபத்தான யோசனை. அப்படி பாலாற்றில் அந்தத் தண்ணீரை கொண்டு வந்தால், அந்தத் தண்ணீர் சென்னைக்கு வந்து சேராது, பாலாற்று மணலிலேயே எல்லாத் தண்ணீரும் போய்விடும்.

திரு. துரை முருகன் : தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர். உறுப்பினர்களாகிய நாங்கள் கேள்விகளை கேட்கிறோம், அமைச்சர்கள் தங்களுடைய அதிகாரிகள் கொடுக்கும் தகவல்களை வைத்து பதில்களை தருகின்றார்கள். நாங்கள் அந்த பதில்களிலிருந்து கிடைக்கின்ற விஷயங்களிலிருந்து துருவித் துருவி பல துணைக் கேள்விகளை கேட்கிறோம். அப்படி கேட்பதிலிருக்கின்ற விஷயங்களை மீண்டும் கவனத்தில் எடுத்து எங்களுக்கு பதில் தெரிவிப்பதற்கு இங்கே ஒரு அதிகாரி கூட கேள்வி நேரத்தில் வரவில்லையே, அதற்கு என்ன காரணம் ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கனம் உறுப்பினர் அவர்கள் இங்கே நீண்ட காலம் இருந்திருக்கிறீர்கள். கேள்வி நேரத்தின் போது, அதிகாரிகள் இங்கு இருக்க வேண்டும் என்று கட்டாயப்படுத்த முடியாது, அப்படி கட்டாயமும் இல்லை. இதில் ஒழுங்குப் பிரச்னை ஒன்றும் இல்லை.

வேட்டைக்காரனிருப்பு கிராமத்தில் இறைவைப் பாசனம்.

*590 வினு—திரு. ரா. உமாநாத் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) நாகை தொகுதி, வேட்டைக்காரனிருப்பு கிராமத்தில் உள்ள மானுவாரி நிலங்களுக்கு இறைவைப் பாசனம் அளிப்பதற்கான திட்டம் ஒன்று 1977 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 25 ஆம்